**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,VIRUDHUNAGAR DISTRICT AT SRIVILLIPUTTUR.

Calendar )
Preliminary Register) CC.89/2022
Sessions)

( Prosecution P.W.2
Deposition of witness for (Defence
(Court

| | | | |
|---|---|---|---|
| Name | சுப்பையா | -- | |
| Father's Name | பெத்தில் நாயக்கர் | Calling | ஓய்வு |
| Village | அனுப்பன்குளம் | Religion | |
| Taluk | சிவகாசி | Age | 67 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 09th day of January 2026.
Accused present.

**முதல் விசாரணை**

நான் தற்போது சிவகாசி தாலுகா, ஆண்டியாபுரம் கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். நான் பஞ்சாயத்து ஒப்பந்ததாரராக இருந்து வந்தேன். தற்போது எனது உடல்நிலை சரியில்லாததால் நான் வேலை எதுவும் செய்து வரவில்லை. அ.சா.1 ஜக்கம்மாள் எனது மனைவி. எனது மனைவி கல்லமநாயக்கன்பட்டி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி தலைமை ஆசிரியராக பணிபுரிந்து வருகிறார். எங்களுக்கு சிந்துஜா, சங்கீதா என்ற இரு மகள்கள் இருக்கிறார்கள். 30.10.2021ம் தேதி நிறைமதியில் உள்ள எனது கொழுந்தியாவை பார்ப்பதற்காக நானும், எனது மனைவியும் இருசக்கர வாகனத்திலும், எனது மாமா அவருடைய இருசக்கர வாகனத்திலும் எங்களது ஊரிலிருந்து புறப்பட்டு சென்று கொண்டிருந்தோம். நிறைமதி ஊருக்குத் திரும்பும் இடத்தில் எனது மாமா சென்று கொண்டிருந்த வாகனத்தின் மீது மேற்கிலிருந்து கிழக்காக வந்த ஆட்டோ என் மாமா வண்டியின் மீது மோதிவிட்டது, எனது மாமா கீழே விழுந்துவிட்டார். எனது மாமாவிற்கு பின் தலையில் அடிபட்டுவிட்டது. உடனடியாக எனது மாமாவின் மீது இடித்த அதே ஆட்டோவில் சிவகாசி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். அதன் பிறகு மதுரைக்கு கொண்டு சென்றோம். அங்கு வைத்து மருத்துவர் எனது மாமாவை பரிசோதித்து விட்டு எனது மாமா இறந்துவிட்டதாக தெரிவித்தார். ஆஜர் எதிரி தான் எனது மாமா மீது மோதிய நபர் ஆவார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

சம்பவத்தை நேரடியாக பார்த்தேன். இடித்த சத்தம் கேட்டு பார்த்தேன். சம்பவ இடத்திற்கு அருகில் அரசு பேருந்து நின்றதா என்று எனக்குத் தெரியாது. நான் தற்போது சொன்னது போலத்தான் போலிசார் விசாரணையில்

சொன்னேன். 2.00 மணிக்கு சிவகாசி மருத்துவமனைக்கு சென்று விட்டு பின்பு அங்கிருந்து மதுரை அரசு மருத்துவமனைக்கு சென்றோம். மதுரையில் வைத்து எனது மனைவி புகார் கொடுத்தார். எனக்கு சம்பவம் பற்றி எதுவும் தெரியாது என்றும், விபத்தில் இறந்தவர் எனது மாமனார் என்பதால் போலிசார் சொல்லிக் கொடுத்தபடி சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை** இல்லை.

சாட்சியின் கையொப்பம்

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 09th day of January 2026.

Taken down by me open court read over to the witness in the presence of accused and admitted by the witness to be correct.

M VEERANAN

Digitally signed by M VEERANAN
Date: 2026.01.19 11:42:58 +0530

**Chief Judicial Magistrate,**
**Virudhunagar District at Srivilliputtur.**